வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| கிறிஸ்தவ நாகரிகம் | தரம் :- 13 (2018) | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 5 | 31) 3 | 41) 3 |
| 2) 2 | 12) 2 | 22) 4 | 32) 5 | 42) 1 |
| 3) 4 | 13) 3 | 23) 2 | 33) 2 | 43) 4 |
| 4) 3 | 14) 4 | 24) 2 | 34) 2 | 44) 3 |
| 5) 2 | 15) 2 | 25) 1 | 35) 3 | 45) 5 |
| 6) 1 | 16) 3 | 26) 1 | 36) 4 | 46) 1,4 |
| 7) 4 | 17) 4 | 27) 1 | 37) 2 | 47) 5 |
| 8) 1 | 18) 1 | 28) 3 | 38) 1 | 48) 2 |
| 9) 1 | 19) 3 | 29) 5 | 39) 3 | 49) 3 |
| 10) 5 | 20) 1 | 30) 1 | 40) 2 | 50) 1 |

(புள்ளிகள் 2X50=100)

The National e-Learning Portal for The General Education

### பகுதி – II

**01)**

1. யூப்பிரதீஸ் தைகிறிஸ் என்ற நதிகளுக்கிடையே இந்நாகரிகம் வளர்ச்சியடைந்தது.‘

- ❖ அரசனே நாட்டின் தலைவன் ஆவான்.
- ❖ வரி அறவிடுவதன் மூலம் ஆட்சி நிர்வாகம் கொண்டு தப்பிட்டது.
- ❖ விவசாயமும் விலங்கு வளர்ப்பும் பொருளாதார நடவடிக்கைகளாக அமைந்தது.
- ❖ கனவுகளுக்கு பலன்கூறும் பழக்கம் காணப்பட்டது.
- ❖ கடவுள் நம்பிக்கை அதிகம் காணப்பட்டது.
- ❖ பணம் மூலமான கொடுக்கல் வாங்கல்களை முதலில் அறிமுகப்படுத்தினர்.

2.

- ❖ தூய ஆவி பெருங்காற்று வடிவிலான இறைபிரசன்னம் வெளிப்படுத்தப்படல்.‘
- ❖ தூய ஆவி நெருப்பு வடிவில் இறைநீதியுடன் ஒவ்வொருவர் மேலும் வந்திறங்கினார்.
- ❖ பல மொழிகளில் பேசவும், விளங்கிக் கொள்ளவும் வரம் பெற்றனர்.
- ❖ அணைவரும் துணிவு பெற்று அச்சம் நீங்கினர்.
- ❖ திருத்தூதர் சிறந்த பேச்சுத்திறன் பெற்றமை.
- ❖ புதுமைகள் செய்யும் ஆற்றல் பெற்றமை.

3.

- ❖ மனிக்கேய பேதகம் - ஒளி, இருள் என இரண்டு அரசுகள் உள்ளன. ஒளி அரசு கடவுளை சார்ந்தது. இருள் அரசு சாத்தானைச் சார்ந்தது.
- ❖ தொனாத்தியபேதகம் - அருளடையாளங்களை நிறைவேற்றும் குரு விசுவாசம், தூய்மையுடையவராய் இல்லாவிடின் அவர் வழங்கும் அருட்கொடைகளும் பயனற்றவை.
- ❖ பெலாஜியபேதகம் - ஆதிப் பெற்றோர் தமது கீழ்படியாமையினால் தமக்குத் தாமே தீங்கு செய்தனர். எனவே இது அடுத்தவரைச் சேராது / கடத்தாது எனவே குழந்தைக் திருமுழுக்கு அவசியமற்றது.
- ❖ நெஸ்ரோரிய பேதகம் - இயேசு இரண்டு ஆட்களாக இருக்கிறார், கன்னிமரியாள் இறைவனின் தாயல்ல.

4.

1. திருமுழுக்கு  2. நற்கருணை  3. ஒப்புரவு (தபம்)  4. விழாக்கள்

5. நட்புறவு
அன்புப் பொதுவுடமை

நட்புறவு

கிறிஸ்தவர்களுள் இருக்கும் ஒன்றிப்பினை எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பாக இன்றும் சமூகமாக, குழுவாக நற்கருணை சந்திப்புக்களை மேற்கொள்ளல், கூடிச் செபித்தல். தமது பொருட்களை மற்றவர்களுடன் பகிர்தல்.
துன்பங்கள், துயரங்களில் உளப் பகிர்வு, ஆற்றுப் படுத்தல், உடனிருத்தல் அன்பியங்களில் பங்குபெறுதல் இறைவார்த்தைப் பகிர்வு போன்ற விடயங்களுக்கு புள்ளிகள் வழங்கவும்

அன்புப் பொதுவுடமை

- கிறிஸ்தவர்கள் தமக்குள் உயர்வு தாழ்வு பாராது செயற்பட வேண்டும் ஆனால் இன்று உயர்வு / தாழ்வு. இனப்பாகுபாடு, சாதிப்பாகுபாடு, கற்றவர் / கல்லாதவர் பாகுபாடுகள் காணப்படுகின்றன.
- சுயநலத்துடனும், எரிச்சல், பொறாமை, பழிவாங்கும் எண்ணங்களுடன் சொத்துக்களை சேர்க்க முனைதல், மற்றவர்களுக்கு இடையூறு விளைவித்தல்.
- சிலர் தமது சொத்துக்கள், பணத்தை பிறருக்கு பகிர்ந்தளித்தல். வீண் துஷ்பிரயோகம் செய்யாது வாழுதல். ஆலயம் கட்டுவதற்கு நிதியளித்தல். சமூகத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்தல். போன்ற விடைகளுக்கு புள்ளிகள் வழங்கவும்.
(மேற்படி இரு பண்புகளுக்கும் 4 விடைகள் போதுமானது)

**02)**

1) ஏழைகள் / பொருளாதார நிலையில் மிகவும் வறிவர்கள்.
- அடிமைகள் / சிதறி வாழ்ந்த யூதர்கள்
- வரிதண்டுவோர்
- சமாரியர்
- பெண்கள்

2)
- எருசலேம் ஆலயத்தை மீண்டும் புதுப்பித்துக்கட்டினான்
- பலஸ்தீனாவின் எல்லைகளை விஸ்தீரப்படுத்தி நாட்டை வளப்படுத்தினான்.
- வரிகளைக் குறைத்தான்
- உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நன்கொடைகள் மூலம் பல கட்டடங்களை கட்டப் பணம் கொடுத்தான்.
- பல்கலைக் கழகங்கள் உடற்பயிற்சிக்கூடங்கள், புதிய நகரங்கள் அமைத்தான்.
- "அந்தோனியா" எனும் படையரண் அமைத்தான்.

3)

- தலைநகராக எருசலேம் விளங்கியது.
- யோசபாத் எனும் அரசன் 25 ஆண்டுகள் சிறப்பாக மக்களை ஆட்சி செய்தான்.
- அமட்சியா எனும் அரசன் ஆண்டவர் முன் நேர்மையான ஆட்சி செய்தான்.
- மீக்கா, எசாயா, எரேமியா, எசேக்கியல் போன்ற இறைவாக்கினர்கள் பணிபுரிந்தனர்.
- யூதா, பென்யமின் ஆகிய இரண்டு கோத்திரங்கள் காணப்பட்டனர்.
- தாம் கூறிய இறைவாக்கு தம் காலத்திலேயே நிறைவேறியதை எரேமியா மூலம் காணலாம்.

4) ஆட்சிப் பொறுப்பிற்கு ஆட்சியாளர்களை நியமித்தல்.

- வரி வசூலிப்பும், பணம் சொத்துக்களை திரட்டுதலும்
- போர் வீரர்களைப் பலப்படுத்துதல்.
- அரசியலில் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடல்.
- யுத்த நடவடிக்கைகளில் பங்கு பற்றுதல்

5)

- ஒடுக்கப்படும், உரிமைகள் இழந்து வாழும் மக்களுக்காக உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க குரல் கொடுத்தல்.
  (உ-ம்) நீதி சமாதான ஆணைக்குழு
- அனர்த்தங்கள், யுத்தப்பாதிப்புக்களினால் பாதிப்புற்ற மக்களுக்கு எவ்வித வேறுபாடின்றி வாழ்வாதார உறைவிட வசதிகளை மேற்கொள்கின்றமை.
  (உ-ம்) கீயுடெக், கரித்தாஸ் நிறுவனங்கள் மூலம்
- நீண்ட காலமாக விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களின் விடிவிற்காக உலகளாவிய அமைப்புக்களிடம் நீதியுடன் எடுத்துரைத்தல்.
- ஒற்றையாட்சி கொள்கைகளாலும், மதவாதத்தினாலும் திட்டமிட்டு மறைமுகமாக அழிக்கப்படும் எமது இளம் சமுதாயத்தை பாதுகாத்து வலுவூட்டி, புத்துயிர் பெறச் செய்யும் வேலைத் திட்டங்களை மேற்கொள்வது.
  - போதைப்பொருள் பாவனையை தடுக்கும் விழிப்பூட்டல்
  - இளையோர் உருவாக்கமும், வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துதலும்.
  - அரசியல் தலைவர்களை நெறிப்படுத்துதல.
    (மேற்கண்டவாறான மாணவர்களின் விடைகளுக்கேற்பா புள்ளிகள் வழங்கவும்)

**03)**

1) தபோதனர்
   ஏகாந்திகள் / வனத்துப்பிதாக்கள்
   துறவற பொது வாழ்வு
   துறவற குழுவாழ்வு
   ஆச்சிரம வாழ்வு

2) மறைபரப்பு பணி
   மிலேச்சர்களை சீர்திருத்தும் பணி
   கல்விப்பணிகள், பாடசாலைகள் அமைத்தல்.
   கலை கலாச்சாரப் பணிகள்
   விவசாயக் கைத்தொழில் மேம்பாடு.

3)

- திருத்தந்தையின் கட்டளைக்கும், வழிநடத்தலுக்கும் கீழ்ப்டிந்து மறைபணியாற்றுதல்.
- தமக்கென எவற்றினையும் சொத்துக்களாக உரிமை ஆக்கிக் கொள்வதில்லை என்ற நோக்குடன் பணியாற்றுதல்..
- சிறுவர்களுக்கும், கல்வி அறிவில்லாதவர்களுக்கும் திருமறை அறிவைப் போதித்தனர்.
- இயேசுசபைக் குருக்களுக்கு அடிப்படைக் கல்வித்தகைமையாக பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அதற்கேற்ப அவர்கள் பயிற்றப்பட்டமை..
- பல்வேறுபட்ட நாடுகளுக்கும் மறைத்தூதுப் பயணங்களை மேற்கொண்டு கத்தோலிக்க திருச்சபையை நிறுவினர்.
- சீர்திருத்த மறைக்கோட்பாடுகளிலிந்து பல நாடுகளை விடுவித்தனர். (போலந்து, பெகேமியா, மொராலியா)
- அவர்களின் அறிவியல் வளர்ச்சி, அறிவியல் ஆக்கங்கள் திருச்சபையின் வளர்ச்சிக்கு வழிகோலியது.

4)

- ❖ பெண்ணியல் விடுதலைக்காக குரல் கொடுத்த முன்ற்சர் விடுதலை இறையியலின் தந்தை என அழைக்கப்பட்டார்.
- ❖ கி.பி 1524ல் அரசனுக்கும் அவரது ஆலோசகருக்கும் "அரசர்களுக்கான அருளுரை" என்ற போதனையை வழங்கினார்.
- ❖ உழவர் யுகத்தின் தந்தை என அழைக்கப்பட்டார்.
- ❖ ஜேர்மனியில் நகராட்சி மன்றம் கலைக்கப்பட்டு நிரந்தர ஆட்சிமன்றம் அமைக்கப்பட வேண்டும். என்ற மக்களின் கோரிக்கையை ஆதரித்தார்.

5)

- செல்வந்தராக இருந்தாலும் ஏழ்மையாக வாழ்ந்தார்
- ஏழைக்களுக்கு உதவும் பண்பு காணப்பட்டது.
- இறைவார்த்தை அவரது வாழ்வை மாற்றியமைத்தது .
- தமது சுகபோக வாழ்விலிருந்து விடுபட்டு செபித்தலில் ஈடுபடல்.

- நற்செய்திப் படிப்பினைகளுக்கேற்ப வாழ்க்கை நடாத்துதல்.
- தனது குற்றங்களை உணர்ந்து இயேசுவின் பின்னால் தனது நண்பர்களுடன் சேர்ந்து சிறிய சகோதரர்கள் என்ற சபையை நிறுவுதல்.
- அவரது முன்மாதிரிகையான வாழ்வால் பலர் கவரப்பட்டு கிறிஸ்துவின் வாழ்க்கை முறையில் இணைதல்.

## பகுதி II

**04)**

1) உரோமைய ஆட்சி மொழி இலத்தீன் திருவிவிலியம் இலத்தீன் மொழிக்கு மொழிபெயர்ப்பு (வுல்கத்தா)

- உரோமை கட்டிடக்கலை அம்சங்கள் (பசீலிக்கா)
- ப்
  பவனிகள், மன்றாட்டு, நோன்பு, புனிதகளுக்கு விழா
- சமூக நிர்வாக முறைகள்
  - பற்றீசியன்
  - பிளவியன்ஸ்

2)

- உள்நாட்டுக் கொள்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- நீதி நிர்வாகம் சிறப்புற நாடு 12 மாவட்டங்களாகப் பிரத்து ஆட்சி செய்யப்பட்டது.
- படைப்பலத்தின் மூலம் எதிரிகளின் ஊடுருவல் தவிர்க்கப்பட்டது.
- பிறநாடுகளுடன் வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தி தமது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தினார்.
- புதிய நகரங்கள் உருவாக்கப்பட்டு மக்களின் குடியேற்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது.
- நாட்டில் அமைதியை ஏற்படுத்தி சமூக, பொருளாதார, கலை, கலாசாரத்தில் முன்னேற்றமடையச் செய்து நாட்டினை வெற்றிப்பாதையில் கொண்டு சென்றார்.

3)

- திருச்சபையின் மிகத்தொன்மையான எழுத்து வடிவில் நற்செய்தி அறிவிப்பு, வழிபாடு, மறைபணி என்பன பற்றி எடுத்துக்கூறும் சான்றாக இந்நூல் விளங்குகின்றது.
- இது தொடக்ககாலத்தில் நற்செய்தி அறியாதோருக்கென பன்னிரு திருத்தூதர்கள் அளித்த ஆண்டவரின் போதனை எனும் தலைப்பில் காணப்பட்டது.
- ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பட்ட சிறிய மறைக்கல்வி நூல் ஆகவும் திருச்சபையின் அமைப்பினையும் விபரிக்கின்றது.
- ஆரம்பகாலங்களில் மக்கள் மத்தியில் பணிபுரிந்த உண்மை இறைவாக்கினர் யார், போலி இறைவாக்கினர்கள் யார் என்பதைக் கண்டறியும் முறைகள் பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஆயர்கள், திருத்தொண்டர்களின் நியமனம் பற்றி எடுத்துக் கூறுகின்றது.
- நற்கருணை ஒரு பலியாகப் பார்க்கப்படுவதுடன் பாவங்களை அறிக்கையிட்ட பின்பு தான் நற்கருணையில் கலந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.
- அருளடையாளங்கள் ஆரம்பகாலத்தில் எவ்வாறு கடைப்பிடிக்கப்பட்டது. பற்றியும், ஆண்டவரின் நாள் அனுசரிப்பு பற்றியும் எடுத்துக் கூறுகின்றது.

4)

- அறிவியல் வளர்ச்சிக்கும் பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களிற்கும் வித்திட்டது.
- கிரேக்கர்கள் விவசாயத்தையும், கடல்வழி வர்த்தகத்தினையும் முக்கிய தொழிலாக கொண்டிருந்தனர்.
- பகுத்தறிவின் அடிப்படையில் விடயங்களை புரிந்து முடிவுகளை எடுக்கும் முறைமை.
- கிரேக்க மெய்யியல், தர்க்கம், பௌதீகம், கணிதம், வானியல் போன்றதுறைகள் அறிவியலுக்கு வித்திட்டன.
- கிரேக்க கட்டிடக் கலைகள், சிற்பக் கலைகளின் பங்களிப்பு.
- தனிமனித ஆற்றலை மேம்படுத்தும் உடற்பயிற்சி, விளையாட்டு இராணுவப் பயிற்சி என்பவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன.

**05)**

1)

- கி.மு 275ல் 2ம் தொலமி பிலடெல்புஸ் ஆட்சிக்காலத்தில் எகிப்திலே அலெக்சாந்திரியா நகரத்தில் எபிரேயத்தில் இருந்த விவிலியம் கிரேக்கத்திற்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது.
- பழைய ஏற்பாடு முழுவதும் கிரேக்கத்தில் மொழி பெயர்க்க வேண்டிய வரலாற்றுத் தேவை, வழிபாட்டுத் தேவை ஏற்பட்டதனால் கிரேக்கத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டது. இதனை "செப்து வாஜிந்து" / "எழுபதின்மர்" நூல் என அழைக்கப்பட்டது.
- கி.பி 390ல் திருத்தந்தை தமாஸ்கஸின் பணிப்பின் பேரில் புனித ஜெரோம் (எரோணிமுஸ்) என்பவரால் இலத்தீனுக்கு திருவிவிலியம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

- உரோமைப் பேரரசின் ஆட்சி மொழியாக இலத்தீன் விளங்கியமையினால் திருவிவிலியம் ஆனது கிரேக்க மொழியிலிருந்து இலத்தீனுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. இதனை "வுல்கத்தா" "வுல்கத்துஸ்" என அழைப்பார். அதாவது இது பொதுமை, எளிமை எனப் பொருள் பட்டது.

*2)*

- இறையியலை விளக்குவதற்காக பிளேட்டோவின் மெய்யியலைக் கருவியாகப் பயன்படுத்துதல்.
- திருவிவிலியத்துக்கு விளக்கமளிக்க உருவக விளக்க முறையைப் பயன்படுத்துதல்.
- இறையியல் மூவொரு இறைவனின் ஒருமைப்பாட்டில் ஆராயப்பட்டது.
- கிறிஸ்து இயலை வலியுறுத்தி அவரை "மனித அவதாரம் எடுத்த கடவுள்" என போதிக்கப்பட்டது.
- ஆரிய பேதகத்திற்கு எதிராகப் போதிக்கப்பட்டது.
- யோவானின் நற்செய்தி இறையியலில் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டது.

*3)*

- இராணுவத்தினை பொறுப்பேற்று வந்து யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்த மறைபோதகராகச் செயற்பட்டார்.
- போர்த்துக்கேயர் கையாண்ட மறைபணி முறைகளைப் பின்பற்றி மறை பணியாற்றினார்.
- நற்செய்தியைப் போதிப்பதற்காக சுதேச மொழிகளைக் கற்று கற்பித்தார். குறிப்பாக "எம்மதத்தின் முக்கிய கட்டளை" எனும் நூலை வெளியிட்டார்.
- மறைக்கல்வி கற்பிக்கக்கூடிய சுதேச ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை மறையர்சிரியர்களாக உருவாக்கினார்.
- ஆசிரியர்கள், மாணவர்களுக்கு தமிழில் மறைதொடர்பான பிரசுரங்களை வெளியிட்டார்.

*4)*

- யாராலும் அடக்க முடியாத மதம் கொண்ட யானையை அடக்கிய புதுமை.
- தனது மறைப் பயணத்தின் போது தெதுறு ஓயாவை கால்நடையாக கடந்து சென்றமை.
- வறட்சியால் மக்கள் பாதிக்கப்பட்ட பொழுது செபித்து கண்டியில் மழை பொழியச் செய்தமை.
- வைசூரி மற்றும் கொடிய நோயால் பாதிக்கப்பட்டவர்களை பராமரித்து அவர்களுக்கு ஆறுதலாக இருந்தமை
- இறந்தவர்களை அடக்கம் செய்தல்

***06)***

*1)*

- சைப்பிரஸ் தீவில் ஆளுனன் சேர்ஜியுஸ் பவுலுஸ் நற்செய்தியை ஏற்றுக்கொண்டு மனம் மாறுதல்.
- எலிமா என்ற மந்திரவாதி பவுலின் போதனைகளுக்கு இடையூறு விளைவித்ததால் தண்டிக்கப்படல் (பார்வை குன்றச் செய்தல்)
- பிசிதியா நாட்டு அந்தியோக்கியாவில் தூய பவுல் முதல் உரையாற்றுதல்.
- லிஸ்திராவில் கால் ஊனமுற்றவரை நடக்கச் செய்தல்.
- புறவினத்தவர்களை திருச்சபையில் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடல்

2)

- திருச்சபையின் வளர்ச்சியில் படிப்படியாக புற இனத்தவர்கள் திருச்சபையில் இணைவதற்கு பெரும் பிரச்சினையை யூதர்கள் விளைவித்தனர்.
- கிறிஸ்தவமானது யூத கிளையாகவே யூதர்களால் கருதப்பட்டு வந்தது.
- புற இனத்தவர்கள் கிறிஸ்துவில் விசுவாசங்களைக் கொண்டு திருச்சபையில் சேர்ந்த போது யூதர்கள் எதிர்த்தனர்.
- திருச்சபையில் புற இனத்தவர்கள் இணைவதாயின் முதலில் யூதனாக வேண்டும்.
- யூதனாக மாறுவதாயின் மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடித்து "விருத்தசேதனம்" முதலில் பெற வேண்டும். இவ்வாறான பிரச்சினைகளுக்கு விடை காணும் பொருட்டு தூய ஆவியின் வழிநடத்துதலால் எருசலேம் சங்கம் கட்டப்பட்டது.

3)

- மறை மாவட்டங்களை அமைத்து துறவிகள் மடங்களை அமைத்தனர் - புனித அகுஸ்தீன் இலண்டனிலும் இராச் செஸ்டரிலும் மறை மாவட்டங்கள் அமைத்தனர்.
- பல்வேறு இனக் குழுக்கை மனம் திருப்பினர் - புனித கொலம்பா அயனா தீவில் பிக்டு இனத்தை மனம் திருபினார்.
- ஆலயங்கள், மருத்தவ மனைகள், பாடசாலைகள், துறவற இல்லங்களை நிறுவினர்.
- டென்மார்க், சுவீடன் போன்ற நாடுகளில் புனித ஆன்ஸ்காவின் பணி இடம்பெற்றது.
- புனித பத்திரிசியார் அயர்லாந்தினை மனந்திரும்பி திருமறையைத் தழுவச் செய்து சுதேச குருக்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டார்.
- பல நாடுகளின் அரசர்களை மனம் மாற்றி நாட்டு மக்களையும் திருச்சபையில் இணைத்தார்கள்.

4)

- தூய பவுலின் மறைத்தூதுப் பயணங்கள் மூலமாக
- நாடுகாண் பயணங்கள் மற்றும் கிறிஸ்தவ மறைபரப்பாளர்களின் மூலமாக
- ஆரம்ப காலத் துறவற சபைகள் மூலமாக
  - (ஆசீர்வாதப்பர் சபை, சிஸ்ரேஷியன், குளுனி)
- பிரான்ஸ் மன்னன் குளோவிஸின் மன மாற்றம்.
- மிலேச்சர்களின் படையெடுப்பால் திருத்தந்தையின் பலம் அதிகரித்தமை மற்றும் மிலேச்சர்களை மனமாற்றியமை.

**07)**

1) பிரான்சிஸ்கன் சபை

ஆலயங்களை அமைத்து அதனருகில் பாடசாலைகளை அமைத்து கல்வி மூலம் மறைபரப்பினர்.
கோவில் பற்றுப் பாடசாலையை நிறுவி மறையை பரப்பினர்.
சுதேச மொழியில் மறையை பரப்புதல்.

இயேசு சபை

துறவற மடங்களை அமைத்தமை. பாடசாலைகள் அமைக்கப்பட்டு கல்வி வழங்கி அதன் மூலம் மறைபரப்புதல் குறிப்பாக இடை நிலைக் கல்வி வழங்கப்பட்டது.

டொமினிக்கன் சபை

சப்பிரகமுவ பிரதேசத்தில் இவர்கள் பல ஆலயங்களை அமைத்து மறைபணியாற்றுதல்.

அகுஸ்தீனார் சபை

இவர்கள் மறைபரப்பு சேவை ஆற்றுவதுடன் போர்த்துக்கேய அரசியலைப் பற்றி விசேட ஆலோசனைகள் கூறியதாக வரலாறு கூறுகின்றது.

The National Learning Portal for The General Education

2)

- சுதேச மொழிகளை கற்று நூல்களை மொழி பெயர்த்து கிறிஸ்தவ மறையை வளர்த்தனர்.
- எங்கெங்கு வியாபார நிலையங்களை அமைக்கின்றனரோ அருகில் ஆலயங்களை அமைத்தனர்.
- ஆலயங்கள் பங்குத் தளத்துக்கு அருகில் கோவில் பற்றுப் பாடசாலையை அமைத்து அதனூடாக மறையை அறிவித்தனர்.
- எமது நாட்டின் பண்பாடுகள், கலை கலாச்சாரங்களை மதித்து பின்பற்றி மறையை போதித்தனர். கூத்து, இசைவடிவில் மறையை போதித்தமை.
- எளிமையாகவும், முன்மாதிரிகையாகவும் தியாகத்துடன் அர்ப்பணித்து சேவையாற்றியமை.
- கரையோரப் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமை.
- மக்களை மனம் மாற்றுவதிலும் பார்க்க அரசர்களை மனம் மாற்றுவதன் மூலம் மறையைப் வேகமாக பரப்பினர்.

3)

- இலண்டன் மறைத்தூதுக்குழு
- பப்ரிஸ்ட் மறைத்தூதுக்குழு
- மெதடிஸ் மறைத்தூதுக்குழு
- அமெரிக்கா மறைத்தூதுக்குழு
- திருச்சபை மறைத்தூதுக்குழு

- பாடசாலைகளை நிறுவி கல்வி வழங்குதல்.
- சிறுவர்களின் கல்வியில் கூடிய அக்கறை செலுத்தியமை.
- வதிவிட, ஆரம்ப, உயர்தர, கிராம, மத்திய பாடசாலைகளை அமைத்தல்.
- பெண்களுக்கும் கல்வி வழங்கும் வகையில் பாடசாலைகளை அமைத்தல்.
- உள்நாட்டு ஆசிரியர்களை தக்கவிதத்தில் பயிற்சியளிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை.

4)

- மறைப்போதகப் பணி பாடசாலையை மையமாகக் கொண்டு அமைந்தது.
- தேவாலயங்களுக்க அருகில் பாடசாலைகள் அமைக்கப்பட்டது.
- சிறுவர்களுக்கான கல்வி கட்டாயப்படுத்தப்பட்டது.
- கல்வினிஸ் மதத்தின் மறைக்கல்வி கட்டாய பாடமாக்கப்பட்டது.
- மறைபோதகர்கள் அரச அலுவலகர் போல தங்கி இருந்தனர்.
- அச்சியந்திரத்தை அறிமுகம் செய்து பல நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் சுதேச மொழியில் அச்சிடப்பட்டது.
- குருக்களைப் பயிற்றுவிக்க குருமடங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

**08)**

1)

- புனித பவுல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய படிப்பதை நாம் பழைய ஏற்பாட்டில் இறுதிக்காலம் பற்றிக் கூறப்படும் கருத்துக்களின் பின்னணியில் அதாவது அஙட்கு காணப்படும் "ஆண்டவரின் நாள்" இன் பின்னணியில் தான் விளங்க வேண்டும்.
- யூதர்களின் இறுதிக்காலம் பற்றிய கருத்தின் படி உலக வரலாற்றை நிகழும் யுகம். வரவிருக்கும். யுகமென இருவகைப்படுத்துவர். நாம் இப்பொழுது நிகழும் யுகத்தில் இருக்கின்றோம் அது சாத்தானைத் தோற்கடித்து மக்களை விடுதலையாக்கி வரவிருக்கும் யுகத்தை ஆரம்பிப்பர்.

- தமஸ்கு பாதையில் அவர் உயிர்த்த இயேசுவை எதிர் கொண்டது. அவர் வாழ்வில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது ஏனெனில்ஏ இயேசு உயிர்த்து விட்டாரென்றால் வரவிருக்கும் யுகம் ஏற்கனவே உதயமாகி விட்டது. ஆகவே சாவு தோற்கடிக்கப்பட்டு விட்டது. சாத்தான் தோற்கடிக்கப்பட்டு விட்டான். எனவே இறுதித் தீர்க்கமான சமர், போர் நடைபெற்று முடிந்து விட்டது.
- திருச்சபையின் பணி வாயிலாக அனைத்துப் படைப்புக்களும் இயேசுவின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட பின் இயேசு விரைவில் மறு (இரண்டாம்) முறை மாட்சியுடன் வந்து மக்களுக்குத் தீர்ப்பு வழங்கி தம் கட்டுப்பாட்டுக்கள் கொண்டு வரப்பட்ட முழு உலகையும் ஆட்சி செய்ய இறைவனிடம் ஒப்படைப்பார் பழைய ஏற்பாட்டில் "ஆண்டவரின் நாள்' என அழைக்கப்படும் அந்நாளே புதிய ஏற்பாட்டில் "பரூசியா" ஆண்டவரின் இரண்டாம் வருகையின் நாள் என அழைக்கப்படுகிறது.
- பவுல் தம் பணியின் ஆரம்ப காலத்தில் தெசலோனிக்காவில் பணியாற்றிய பொழுது இதையே தெசலோனிக்கர்களுக்கு எடுத்து விளக்கியிருந்தார். அக்கருத்துக்களையே அவர் தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் காண்கிறோம். "கட்டளை பிறக்க தலைமை வான தூதரின் குரல் ஒலிக்க கடவுளுடைய எக்காளம் முழங்க. ஆண்வர் வானினின்று இறங்கி வருவார். (1தெச 4:16)
- இயேசு இரண்டாம் முறை மகிமையுடன் வரும் போது அவர் செய்யப் போகின்ற முதல் வேலை தம்மில் நம்பிக்கை கொண்டு இறந்தவர்களை உயிர்ப்பிப்பதே என்கின்றார் பவுல் பின்னர் உயிரோடு எஞ்சியிருப்பவர்களும் அவர்களோடு மேகங்களில் எடுத்துக் கொண்டு போகப்பட்டு ஆண்டவரை எதிர்கொண்டு அவரோடு இருப்பர்.
- இறுதியாக பவுல் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன் உலகில் சில அடையாளங்கள் இடம் பெறுமெனக் கூறுகின்றார். (2தெச : 2:3 – 12)

2)

- தேசிய பண்பாட்டை மதித்தல்
- மக்கியுரிச்சி அடிகளார் இயேசு சபையைச் சேர்ந்தவராதலால் கலையிலும் விஞ்ஞானத்திலும் தேர்ச்சி பெற்ற உதவியாளர் ஒருவரைத் தமது சபைக்கு அழைத்துக் கொண்டார்.
- அவர் சீன பேரரசைச் சந்தித்தார். அவர் வானசாஸ்திரம் தொடர்பான உரைகளை நிகழ்த்தி மக்களிடையே புகழைப் பெற்றார்.
- இயேசு சபையின் அங்கத்தவர் பழமை சீன கலாசாரத்தை மதித்து அதில் சில முறைகளைத் தங்களுடைய சமய ஒழுங்கு முறைகளுடன் சேர்த்துக் கொண்டனர்.
- பழமையை ஆராய்ந்து அதன் உண்மையை விளங்கிக் கொண்டு கொண்பியூசியுஸ் இறைவனாக அல்ல விசேட அறிஞராக சீன மக்கள் ஏற்றுக் கொண்டதையும் அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட மாளிகை. இறைவனின் மாளிகை அல்ல அறிஞர்களின் அரங்காக இருப்பதை அவர்கள் கண்டார்கள்.
- கி.பி 1610 இல் மத்தியுரிச்சி அடிகளார் இறைவனடி சேர்ந்த போது அவரின் மறைத்தூதுப்பணி மிக சிறப்பாக நடைபெற்றது இருந்தது. அவர் கையால் திருமுழுக்குப் பெற்ற முதல் அரச உத்தியோகத்தர் போல் நுசு என்பவராவார். மத்தியுரிச்சி அடிகளாரிடம் மறையைக் கற்றுக் கொண்டவர்கள் 200 மேற்பட்டவராவார்.

3)

- எருசலேமில் அதற்கென அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்பட வேண்டும்.
- திருவிழாக் காலங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பகல் வேளையிலே கூட்டப்பட வேண்டும்.
- ஒரு யூதன் தன் மதத்திற்கு எதிராக குற்றம் இழைத்தால் அவனுக்கு நீதித்தீர்ப்பு வழங்குவதற்காக இச்சங்கம் கூட்டப்படலாம்.
- குற்றவாளியாக கருதப்பட்ட நபருக்கு எதிராக இரண்டு சாட்சியங்கள் இரண்டும் ஒரே மாரிதி இருத்தல் வேண்டும்.

- குற்றம் சாட்டப்பட்டவரின் வாய்மூலத்தை வைத்துக் கொண்டு அவருக்கு தீர்ப்பு வழங்கமுடியாது,
- குற்றவாளிகள் முறையாக விசாரிக்கப்பட்டு விடுதலைத் தீர்ப்பு அன்றைய நாளிலும் மரண தண்டனை இரு நாட்களுக்கு பின்னருமே நிறைவேற்றப்படல் வேண்டும்.
- அத்துடன் தலைமைச் சங்கத்தினரின் தீர்ப்பு மதம் சார்ந்த குற்றங்களுக்கு மட்டுமே இருத்தல் வேண்டும்.
- பொதுவாக தண்டம் விதித்தல், கசையடி கொடுத்தல் ஆலயத்திற்கும் யூதசமூகத்திற்கும் புறம்பாக ஆக்குதல் போன்ற தண்டனைகளே வழங்கப்பட வேண்டும்

*4)*

- ஒரு யூதன் பிறந்த எட்டாம் நாள் அல்லது 40ம் நாள் விருத்தசேதன சடங்கை நிறைவேற்றுவதற்குரிய சட்டம் அமுலாக்கத்தில் இருந்தது.
- இதற்கென பெற்றோர் பிறந்த குழந்தையை கோயிலுக்கு கொண்டு சென்று இரண்டு காட்டுப் புறாக்கள் அல்லது இரு மாடப்புறாக்களை கோயிலுக்கு காணிக்கை செலுத்தி விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டும்.
- இவ்விதம் ஒருவர் மரணித்தால் இறந்தோரின் உடலைக் குளிப்பாட்டி பரிமள தைலத்தால் பூசி, தூய பரிவட்டத்தால் சுற்றி புதைப்பார்கள். (மாற் 16:1, மத் 27: 59)
- ஈமச் சடங்கில் பங்கு கொண்ட அணைவரும் தீட்டுப்படாமல் இருக்க மூன்றாம் நாளில், அல்லது ஏழாம் நாளில் குளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.
- இறந்தவரை இழந்து வாடுவோருக்கு உற்றார், உறவினர் நண்பர்கள் உணவு சமைத்துக் கொடுத்து தேற்றுவதுண்டு.
- நோயினால் பீடிக்கப்பட்டிருப்பவனை ஊருக்கு வெளியே இருக்குமாறு அப்புறப்படுத்தினர். சாதாரண நோய்கள் மருத்துவரால் பராமரிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டது. ஆனால் தொழுநோய் போன்றவற்றிற்கு அவர்கள் வெளியேற்றப்பட்டு புறம்பிக்கப்பட்டனர்.
- யூதர்கள் பெருத்தனையாக தமது தலைமுடியை மதித்துக் கொள்வார்கள். இது “நசீர்” பொருத்தனை என்று கூறப்படுகின்றது. அதாவது “நசரேய அர்ப்பணம்” ஆகும்.
- அதாவது யூதர்கள் தமது தலைமுடியை நீளமாக வளர்ப்பார்கள். ஆனால் வேண்டுதல்கள் நிறைவேறும் போது அத்தலைமுடியை முழுவதும் மழித்து நேர்ச்சை செலுத்துவார்கள்.